**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், கிருஷ்ணராயபுரம்.**

**<u>முன்னிலை</u> : திரு.ஆர்.பாக்கியராஜ், பி.ஏ., பி.எல்.,**

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், கிருஷ்ணராயபுரம்.**

2025 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 10–ம் நாள் வெள்ளிக்கிழமை

**<u>இடைக்கால மனு எண்.4/2025</u>**

**<u>in</u>**

**<u>அசல் வழக்கு எண். 34/2024</u>**

சிவா .... மனுதாரர்/வாதி

***//எதிர்//***

1. காளீஸ்வரி
2. முரளி .... எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இந்த மனு, கடந்த 24.09.2025 அன்று இறுதி விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்/வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.M.செல்வம் B.Sc.,B.L., அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.P.சரவணன் B.Com.,B.L., அவர்கள் தாக்கல் செய்த எதிர்வழக்குரையையும், இருதரப்பு வாதங்களை கேட்டும், ஆவணங்களை பரிசீலனை செய்தும் இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்,

**<u>உத்தரவு</u>**

இந்த மனு, மனுதாரர்/வாதியால் உரிமையியல் விசாரணை நடைமுறைச்சட்டம் கட்டளை 6 விதி 17 மற்றும் 151 ன் கீழ் தாவாவில் சொத்துவிவரத்தை திருத்தம் செய்ய அனுமதி கோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>2) மனுதாரர் தரப்பு மனுவின் சுருக்கம்:–</u>**

நிரந்தர உறுத்துக்கட்டளை கோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி, வழக்கு தாக்கல் செய்த போது சொத்து விவரத்தில் நான்கெல்லை விபரம் குறிப்பிடப்படாமல் தட்டச்சில் விடுப்பட்டு விட்டது. அப்பொழுது அவசர நிலை கருதி மனுதாரரால் சரியாக கவனிக்க இயலாமல் போய்விட்டது. மேற்படி

தவறு வேண்டுமென்றே ஏற்பட்டதல்ல. தற்பொழுது தான் மேற்படி விவரம் மனுதாரருக்கு தெரிய வந்தது. எனவே, மேற்படி தாவாவில் சொத்து விபரத்தில் நான்கெல்லை விபரத்தை சேர்க்க வேண்டியது அவசியமாகும். அதனால், இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி மனுவை அனுமதிக்காவிட்டால் மனுதாரருக்கு பெருத்த நஷ்டமும், கஷ்டமும் ஏற்படும். இம்மனுவை அனுமதிப்பதால் எதிர்மனுதாரருக்கு எந்த இழப்பும் ஏற்படாது.

**3) 2ம் பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்துள்ள எதிர் உரையின் சுருக்கம்:-**

வாதியின் மனுவானது, பொய்யானதும் உண்மைக்கு புறம்பானதும், மோசடியானதும் ஆகும். இந்த 2ம் எதிர்மனுதாரர் ஒப்புக்கொள்ளும் சங்கதிகளைத் தவிர ஏனைய சங்கதிகளை மனுதாரரே நிரூபிக்க கடமைப்பட்டவர் ஆவார். மனுதாரரின் மனுவானது சட்டப்படியும் பொரும்மைப்படியும் நிலைநிற்கத்தக்கதல்ல. மனுதாரர் மிகப்பெரிய மோசடி பேர்வழி என்பது அதில் தெள்ளத்தெளிவாக தெரிய வருகிறது. மனுதாரர் மனுவில் குறிப்பிட்டுள்ள காரணங்களான தான் தாவாவை தாக்கல் செய்யும் போது சொத்து விபரத்தில் நான்கெல்லை விபரம் குறிப்பிடாமல் தட்டச்சில் விடுபட்டுவிட்டது என்பதும் அப்போது அவசர நிலை கருதி எங்களால் சரிவர கவனிக்க இயலவில்லை என்பதும் அப்பட்டமான பொய்யாகும். மனுதாரர் தாவாவுடன் தாக்கல் செய்துள்ள ஆவணம் எண்.2 தாவா அட்டவணை சொத்து தொடர்பானது என குறிப்பிட்டுள்ள நிலையில் தற்போது அதில் உள்ள நான்கெல்லை விபரம் ஏதும் குறிப்பிடாமல் வேறு ஏதோ நான்கெல்லை விபரம் குறிப்பிட்டு திருத்தல் மனு தாக்கல் செய்துள்ளது என்பது தாவாவை முடிவுக்கு கொண்டு வருவதை தவிர்த்து காலதாமதப்படுத்தவேண்டும் என்பதேயாகும். மனுதாரர் உரிய ஆவணம் எதனையும் தாக்கல் செய்யாமல் தாவா சொத்து விபரத்தை திருத்துவது என்பது ஏற்புடையதல்ல. மனுதாரர் உண்மையில் தாவா சொத்தில் சுவாதீனத்திலும், அனுபவத்திலும் இருப்பின் ஆவணங்கள் வைத்திருப்பார். உரிய ஆவணம் இல்லாத போது எதன் அடிப்படையில் மனுதாரர் தாவா சொத்திற்கு நான்கெல்லை விபரம் தெரிவித்துள்ளார் என்பதும் அதனை தவறு என்று காண்பிக்க உரிய ஆவணம் இல்லாதபோது அதனை திருத்துவது என்பது நீதியின் நலனுக்கு ஏற்புடையதல்ல. அதனால் மனு தள்ளுபடி செய்ய வேண்டும்.

**4)** இருதரப்பிலும் வாய்மொழி சாட்சியம் முன்னிலைப்படுத்தப்படவில்லை. ஆவணம் சாட்சியம் குறியீடு செய்யவில்லை.

**5)** இந்த மனுவில் **தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை என்னவென்றால், மனுதாரர் கோரியுள்ள தாவா சொத்து விவரத்தில் திருத்தம் கோரிய மனுவானது அனுமதிக்கத்தக்கதா? இல்லையா?** என்பதே ஆகும்.

**6)** மனுதாரர் தரப்பு கேட்கப்பட்டது. வழக்கு ஆவணங்கள் பரிசிலினை செய்யப்பட்டது. அசல் வழக்கில் வழக்குரையில் சொத்து விவரத்தில் நான்கெல்லைகள் குறிப்பிடவில்லை. தற்பொழுது நான்கெல்லைகள் குறிப்பிட்டு திருத்த வேண்டும் என்று அனுமதி கோரப்பட்டுள்ளது. நான்கெல்லையை சேர்த்து திருத்தம் செய்வதால் வாதிக்கும், பிரதிவாதிக்கும் எந்த பிரச்சனையும் ஏற்படாது. அனைத்து பிரச்சனைகளையும் தீர்க்க வழிவகுக்கும் வேறு வழக்குகள் எழுவதை தடுக்க முடியும். மேலும், வழக்குரை சொத்து விவரத்தை நான்கெல்லைகள் சேர்த்து திருத்தினால், மீண்டும் பிரதிவாதிகளுக்கு கூடுதல் எதிர் வழக்குரை தாக்கல் செய்ய உரிமை அளித்து கூடுதல் எதிர் வழக்குரையில் பிரதிவாதிக்கு தேவையான சங்கதிகளை கூறி வழக்கை நடத்த முடியும். மேற்படி, வழக்கு சொத்து விவரத்தில் நான்கெல்லை விபரம் குறிப்பிடுவது தான் நீதியின் நலனுக்கு உகந்ததாக இருக்கும் என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

இறுதியாக, மனு அனுமதிக்கப்படுகிறது. செலவுத் தொகை இல்லை. வழக்குரை சொத்து விபரத்தில் நான்கு எல்லைகள் சேர்ந்து திருத்தம் செய்ய அனுமதிக்கப்படுகிறது.

இவ்வுத்தரவானது என்னால் நேரடியாக சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் படித்து சரிபார்க்கப்பட்டு பிழைகள் திருத்தம் செய்யப்பட்டு இன்று 2025 ம் ஆண்டு அக்டோபர் 10 ம் நாள் அவையறிய பகரப்பட்டது.

**ஒம்/திரு.ஆர்.பாக்கியராஜ்**

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்**

**கிருஷ்ணராயபுரம்.**

**மனுதாரர் தரப்பு சாட்சிகள் :– இல்லை**

**மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள்:–இல்லை**

**எதிர்மனுதாரர் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள் – இல்லை.**

**ஒம்/திரு.ஆர்.பாக்கியராஜ்**
**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்**
**கிருஷ்ணராயபுரம்.**